விரைவு நீதிமன்றம் (ந.வ), உத்தமபாளையம்

முன்னிலை: திரு.S.அமலநாத கமலக்கண்ணன், B.A.,B.L.,Hon's.,
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்,
உத்தமபாளையம்.

2026-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27-ஆம் நாள் வியாழக்கிழமை

சுருக்குமுறை ஆவண வழக்கு எண். 106/2026

CNR.No.TNTH080006872025

புகார்தாரர்	1) கஜானா பைனான்ஸ் 2) கஜானா பைனான்ஸ் அதன் நிர்வாக பங்குதாரர் திரு.ம.சரவணன் (வயது 44/2026), த/பெ.மதுரைவீரன், 2A-5C2, ராஜாத்தி அபார்ட்மெண்ட், காந்தி நகர், கம்பம், உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம்.
எதிரி	திருமதி.கா.இராமலட்சுமி (வயது 56/2026), க/பெ.காளிச்சாமி, 3/37A, அருணாசலபுரம், பூவநாதபுரம், சிவகாசி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.
குற்றம் முறையிட்டது	மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவுகள் 138, 142-ன் கீழ்
காசோலை எண். (098460)	13.10.2025
காசோலை தொகை	Rs.3,00,000/-
வசூலுக்கு தாக்கல் செய்த நாள்	29.10.2025
காசோலை திரும்பிய நாள்	01.11.2025
காசோலை திரும்பிய காரணம்	Funds Insufficient
அறிவிப்பு அனுப்பிய நாள்	07.11.2025
அறிவிப்பு பெறப்பட்ட நாள்	08.11.2025

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:22:01 +0530

வழக்கு தாக்கல் நாள்	23.12.2025
தீர்ப்பு நாள்	27.08.2026
புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர்	திரு.துரை நெப்போலியன்
எதிரி தரப்பு வழக்கறிஞர்	திரு.V.V.அழகரசு
தீர்வு	எதிரி ஆஜர். **எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து B.N.S.S பிரிவு 278(2)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

தீர்ப்புரை

1. **புகார்தாரர் வழக்கு சுருக்கம்:**

புகார்தாரர் மேற்படி விலாசத்தில் நிதி நிறுவனம் வைத்து நடத்தி வருகிறார். கம்பம் நகரில் வசிக்கும் எதிரியின் குடும்ப நண்பர் மூலம் புகார்தாரருக்கு நன்கு அறிமுகமாகி குடும்ப பழக்கவழக்கம் உள்ளது. நண்பருடன் எதிரிக்கு உள்ள நெருங்கிய பழக்கவழக்கத்தின் அடிப்படையில் புகார்தாரரை அணுகி அவரது நிதி நிறுவனத்தில் வைத்து எதிரி தனது அவசர நிமித்தம், குடும்ப செலவிற்காகவும் வேண்டி புகார்தாரரிடம் கடனாக பணம் கேட்டுள்ளார். புகார்தாரர் கடந்த 13.09.2025ம் தேதியன்று அவரது நிதி நிறுவனத்தில் வைத்து ரூ.3,00,000/–ஐ எதிரிக்கு ரொக்கமாக கொடுத்துள்ளார். மேற்படி கடன் தொகைக்கு அசல் மற்றும் ரூ.1/– வட்டி சேர்த்து ஒரு மாதத்தில் திருப்பி தருவதாக உறுதி கூறி, அதற்கு ஆதரவாக 13.10.2025 நாளிட்ட 098460 என்ற எண் கொண்ட பாங்க் ஆப் இந்தியா வங்கி, சிவகாசி கிளைக்குரிய ரூ.3,00,000/–த்திற்கான காசோலையை கொடுத்துள்ளார். அந்த காசோலையை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கம்பம் கிளையில் 29.10.2025ம்

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:22:09 +0530

தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 01.11.2025 அன்று திரும்பியது. காசோலை தொகையை கேட்டு எதிரிக்கு 07.11.2025 நாளிட்டு அனுப்பிய சட்ட அறிவிப்பை 08.11.2025ம் தேதி எதிரி பெற்று கொண்டு, 18.11.2025ம் தேதியன்று பதில் அறிவிப்பு அனுப்பி, பணம் செலுத்தாமல் இருந்துள்ளார். மேலும் எதிரி காசோலையின் தொகையை செலுத்தாமல் புகார்தாரரை மோசடி செய்து ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142ன் கீழ் குற்றம் இழைத்துள்ளார் என்பதால் எதிரியை தண்டிக்க வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம், புகார்மனு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணைக்கு உத்தரவிட முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிக்கு பிரிவு 227 B.N.S.S–ன் கீழ் அழைப்பாணையுடன் இணைத்து புகார் நகல் அனுப்பப்பட்டது.

3. எதிரி அழைப்பாணையையும், புகார் நகலையும் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரியிடம் B.N.S.S பிரிவு 274–ன் படி குற்றத்தின் சாரம்சம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது பொய்வழக்கு என்றும், புகார்தாரரை தெரியாது என்றும், காசோலை தன்னுடையதுதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு நபரிடம் வாகனத்திற்காக காசோலையை கொடுத்தேன் என்றும், எதிரி குற்றத்தை மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

4. <u>புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

4.1. புகார்தாரர் திரு.சரவணன் தனது புகாரில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது ம.சா.1 முதல் விசாரணை

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:22:15 +0530

சாட்சியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி கொடுத்த 13.10.2025–ம் தேதியிட்ட 098460 என்ற எண் கொண்ட பாங்க் ஆப் இந்தியா வங்கி, சிவகாசி கிளைக்குரிய ரூ.3,00,000/–க்கான அசல் காசோலை ம.சா.ஆ.1 ஆகவும், மேற்படி காசோலை "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 01.11.2025 ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.2 ஆகவும், மேற்படி காசோலைக்குரிய தொகையை கேட்டு எதிரிக்கு அனுப்பிய 07.11.2025 நாளிட்ட சட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சலக இரசீது அலுவலக நகல் மற்றும் அசல் ம.சா.ஆ.3 ஆகவும், 08.11.2025 ம் தேதியிட்டு புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ.4 ஆகவும், 18.11.2025 ம் தேதியன்று எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் ம.சா.ஆ.5 ஆகவும்,

4.2. புகார்தாரர் நிறுவனம் பதிவு செய்யப்பட்டதற்கான Form C நகலை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.சா.ஆ.6 ஆகவும், புகார்தாரர் நிறுவனத்தின் புதுப்பித்தலுக்கான கட்டண இரசீது நகல் ம.சா.ஆ.7 ஆகவும், புகார்தாரர் நிறுவனத்தின் உரிமத்தின் நகலை ம.சா.ஆ.8 ஆகவும், புகார்தாரரின் நிறுவனத்தின் 13.09.2025 க்கான பரிவர்த்தனை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.சா.ஆ.9 ஆகவும், மேற்படி நிறுவனத்தின் பங்குதாரர்கள் வழக்கு தாக்கல் செய்வதற்காக புகார்தாரருக்கு அளித்த அதிகாரம் மற்றும் ஒப்புதல் சான்று நகலை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.சா.ஆ.10 ஆகவும் ம.சா.1 குறியீடு செய்துள்ளார்.

5. <u>பிரிவு 351(1)(b) வினா மற்றும் பதில்:</u>

புகார்தாரர் தரப்பில் விசாரிக்க கூடுதல் சாட்சியம் இல்லை என மேற்குறிப்பு செய்ததால் புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் கீழ் வினவிய போது புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் சாட்சி, நான் பணம் வாங்கவில்லை என்றும்,

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:22:22 +0530

ம.சா.ஆ.1.ஆன காசோலை தன்னுடையதுதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளது என்றும் கூறினார்.

6. <u>எதிரி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

6.1. எ.சா.1 திரு.காளிச்சாமி தனது சாட்சியத்தில், புகார்தாரரை எனக்கு தெரியாது. எதிரி எனது மனைவியாவார். ஸ்ரீவில்லிபுத்தூரில் சாம்சன் என்பவர் பைனான்ஸ் நடத்தி வருகிறார். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு நான் சாம்சனிடம் டிராக்டர் கேட்டிருந்தேன். அதற்கு ஆதரவாக காசோலை கொடுக்கும்படி கூறினார். நான் எனது மனைவியின் காசோலையை சாம்சனிடம் கொடுத்து டிராக்டர் வாங்கினேன். நான் கொடுக்க வேண்டிய பணத்தை அவரிடம் கொடுத்து விட்டேன். பாக்கி தொகை செலுத்த வேண்டும் என்று கேட்டார். நான் 10 நாட்களில் தருவதாக கூறினார். அதற்குள் வேறு நபரை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். எங்களுக்கும், புகார்தாரருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. புகார்தாரரிடம் நான் எந்த பணமும் வாங்கவில்லை. புகார்தாரரிடம் நான் காசோலை கொடுக்கவில்லை.

7. <u>புகார்தாரர் தரப்பு வாதம்:</u>

புகார்தாரர் தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டது. கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரர் அவரது சாட்சியத்தின் மூலமும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் மூலமும், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 ஆன காசோலை மற்றும் கையொப்பம் தன்னுடையது இல்லை என்று எதிரி நிரூபிக்கவில்லை என்பதால் மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் அனுமானங்கள் புகார்தாருக்கு ஆதரவாக உள்ளது. எதிரி தரப்பின் வாதத்தை உரிய ஆவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை. எதிரி சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. எதிரிக்கு ஆதரவாக எ.சா.1 ஆன அவரது கணவர் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளித்துள்ளார். எதிரி பொய்யான விபரங்களை கூறி பதில் அறிவிப்பு

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:22:29 +0530

அனுப்பியுள்ளார். எதிரி புகார்தாரரிடம் கடன் வாங்கினார் என்பதற்கு உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் சாம்சன் என்பவரை எதிரி தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை. புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானங்கள் எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற வாதத்தினை முன்வைத்தார்.

8. <u>எதிரி தரப்பு வாதம்:</u>

எதிரி தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டது. கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரி புகார்தாரரிடம் ரூ.3,00,000/- லட்சம் கடனாக வாங்கவில்லை. கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஸ்ரீவில்லிபுத்தூரை சேர்ந்த சாம்சன் என்பவரிடம் டிராக்டர் வாங்குவதற்கு ஆதரவாக கொடுத்த எதிரியின் காசோலையை வைத்து புகார்தாரர் பெற்று பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். புகார்தாரரையும், அவரது நிறுவனத்தையும் எதிரிக்கு தெரியாது. புகார்தாரர் நிறுவனம் உரிய முறையில் உரிமம் பெறவில்லை. புகார்தாரர் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார். காசோலையில் உள்ள கையொப்பமானது எதிரியின் கையொப்பம் இல்லை. புகார்தாரர் சட்டப்படியான கடன் கொடுக்கவில்லை. புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களானது ஏற்கத்தக்கதல்ல. எதிரி காசோலை தொகையை செலுத்த கடமைப்பட்டவர் இல்லை. ஆகையால் புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதாக கூறப்படும் அனுமானங்கள் மறுக்கப்பட்டுள்ளது என்பதால் எதிரிக்கு எதிராக பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் தண்டிக்க இயலாது என்ற வாதத்தை முன்வைத்தார்.

9. சான்றாவணங்கள் மற்றும் இதர வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கருத்தில் எடுத்து கொள்ளப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:22:36 +0530

10. <u>இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமான மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138–ன் படி சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா ? என்பது தீர்விற்குரிய பிரச்சனையாகும்.</u>

10.1. எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் உட்கூறுகள் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

- முதலில் எதிரி, புகார்தாரருக்கு 13.10.2025–ம் தேதியிட்டு ரூ.3,00,000/–க்கு கொடுத்த பாங்க் ஆப் இந்தியா வங்கி, சிவகாசி கிளைக்குரிய ம.சா.ஆ.1 காசோலையானது உரிய காலத்திற்குள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

- மேற்படி காசோலையானது கடந்த 01.11.2025ம் தேதியன்று Funds Insuffcient என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கம்பம் கிளையிலிருந்து திருப்பப்பட்டது என்பது ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- காசோலை திரும்பியது குறித்து 07.11.2025–ம் தேதியன்று புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் உரிய காலத்திற்குள் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளது ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- 08.11.2025 நாளிட்டு மேற்படி அறிவிப்பை எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிரி 18.11.2025ம் தேதியன்று புகார்தாரருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் ம.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் எதிரி 15 நாட்களுக்குள் பணம் செலுத்தாமல் இருந்துள்ளார். மேலும் புகார்தாரர் 1 நாள் காலதாமதமாக இவ்வழக்கினை தாக்கல்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:22:43 +0530

செய்து, அதற்கு CRLMP.4/2026 என்ற எண் வழங்கப்பட்டு, இரு தரப்பினர்களையும் விசாரணை செய்து மேற்படி மனுவானது அனுமதிக்கப்பட்டது.

10.2. தற்போது தாவா காசோலையானது எதிரியின் காசோலைதானா? என்றும், எதிரி தன்னுடைய சட்டப்படியான கடனை தீர்க்க தான் புகார்தாரருக்கு தாவா காசோலையை கொடுத்தாரா? என்பதை பரிசீலனை செய்கையில், தாவா காசோலையிலுள்ள கையொப்பத்தை குறித்து முதல் கேள்வி மற்றும் பிரிவு 351(1)(b)–BNSS–ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்டபோது, காசோலையிலுள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என எதிரி கூறியுள்ளார். ஆனால் காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது, காசோலையில் கையொப்பம் மாற்றம் (Signature differs) என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்படாமல், Funds Insufficients என்ற காரணம் குறிப்பிட்டுதான் திருப்பப்பட்டுள்ளது. மேலும் காசோலையில் உள்ள கையொப்பமானது எதிரியின் கையொப்பம் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில் எவ்வித முயற்சிகளும் எதிரி தரப்பில் எடுக்கவில்லை. எனவே காசோலையிலுள்ள கையொப்பமானது எதிரியின் கையொப்பம்தான் என்று தீர்மானிக்கிறது. ஆகையால், மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 (a)–ன்படி வழக்கு காசோலை மறுபயனுக்காகத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது.

10.3. மேலும், K.Bhaskaran Vs. Sankaran Vaidhyan Balan (1999 (4) RCR (Criminal) 309) என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, எதிரி காசோலையில் உள்ள கையொப்பத்தை மறுக்கப்படவில்லை என்பதால் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 139–ன் படி காசோலையானது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதுதான் என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது.

10.4. மேற்கண்ட அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் பட்சத்தில் எதிரி தரப்பில் மறுக்ககூடிய அனுமானங்கள் ஆகும். Basalingappa Vs mudibasappa என்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி எதிரி தனது தரப்பு

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:22:50 +0530

சாட்சியங்களை முன் நிறுத்துவதன் மூலமாகவோ அல்லது புகார்தாரர் சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தோ Pre-Ponderance of probability என்ற அடிப்படையில் தனது தரப்பிற்கு ஆதரவாக எதிர்வாதத்திற்குரிய சந்தேகத்தை ஏற்படுத்துவதன் மூலம் மறுக்கலாம்.

10.5. மேற்படி அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் நிலையில், எதிரி தரப்பில் இருந்து மறுக்கப்படும் விபரங்கள் யாதெனில்,

"எதிரி புகார்தாரரிடம் ரூ.3,00,000/- கடன் வாங்கவில்லை என்றும், கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஸ்ரீவில்லிபுத்தூர் சாம்சன் என்பவரிடம் டிராக்டர் கடன் பெற்றதற்கு ஆதரவாக கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்" என்று புகார்தாரரின் வழக்கினை மறுத்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

10.6. புகார்தாரர் அவரது மனுவில், புகார்தாரருக்கும், எதிரிக்கும் இருந்து வந்த குடும்ப பழக்கவழக்கத்தின் அடிப்படையில் எதிரி தனது அவசர நிமித்தம், குடும்ப செலவிற்காக கடன் பெற்றதாகவும், அதற்கு ஆதரவாக தாவா காசோலையை கொடுத்ததாகவும், அதனை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது பணம் வசூலாகாமல் Funds Insufficient என காரணம் குறிப்பிட்டு காசோலையானது திருப்பப்பட்டது என கூறியுள்ளார்.

10.7. புகார்தாரர் தானாக முன்வந்து தன்னை ம.சா.1 ஆக விசாரணை செய்துள்ளார். புகார்தாரர் அவரது மனுவில் உள்ள விபரங்களை ஒத்திசைத்தே நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். தாவா காசோலை வங்கியிலிருந்து மறுக்கப்பட்ட பின்னர் புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதனை எதிரி பெற்று கொண்டு, அவரது தரப்பினை முன்னிலைப்படுத்தி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்.

10.8. எதிரி அவரது பதில் அறிவிப்பில், எதிரிக்கு புகார்தாரரை தெரியாது என்றும், புகார்தாரர் பங்குதாரராக உள்ள கஜானா பைனான்ஸ் நிறுவனம் பற்றி எதுவும் தெரியாது என்றும், புகார்தாரரின் நிதிநிறுவனத்திடம் எதிரி ரூ.3 லட்சம்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:22:57 +0530

வாங்கவில்லை என்றும், காசோலை கொடுக்கவில்லை என்றும், எங்கோ கிடைத்த காசோலையை பயன்படுத்தி பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான அறிவிப்பு அனுப்பியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. ஆனால் தாவா காசோலையானது எவ்வாறு எதிரியிடமிருந்து வேறொரு நபருக்கு சென்றது என்பதை குறித்து எதிரி அவரது பதில் அறிவிப்பில் எவ்வித விளக்கமும் கூறவில்லை.

10.9. எதிரியின் கணவரை எ.சா.1 ஆக எதிரி தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளது. எ.சா.1 அவரது சாட்சியத்தில், புகார்தாரரை எனக்கு தெரியாது. ஸ்ரீவில்லிபுத்தூரில் சாம்சன் என்பவர் பைனான்ஸ் நடத்தி வருகிறார். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு நான் சாம்சனிடம் டிராக்டர் கேட்டிருந்தேன். அதற்கு ஆதரவாக நான் எனது மனைவியின் காசோலையை சாம்சனிடம் கொடுத்து டிராக்டர் வாங்கினேன். நான் கொடுக்க வேண்டிய பணத்தை அவரிடம் கொடுத்து விட்டேன். பாக்கி தொகை செலுத்த வேண்டும் என்று கேட்டார். நான் 10 நாட்களில் தருவதாக கூறினேன். அதற்குள் வேறு நபரை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி விபரங்களை எதிரி அவரது பதில் அறிவிப்பில் குறிப்பிடவில்லை. மேலும் எ.சா.1ன் சாட்சியத்தை உறுதி செய்யும் வகையில் எதிரி சாட்சியம் அளிக்க முன்வரவில்லை.

10.10. எதிரியின் காசோலையை எ.சா.1 சாம்சன் என்பவரிடம் கொடுத்ததாக கூறினாலும், எந்த தேதியில் சாம்சனிடம் எ.சா.1 கடன் வாங்கினார் என்றும், எந்த தேதியில் திருப்பி கொடுத்தார் என்றும், எவ்வளவு தொகை, எங்கு வைத்து, யார் முன்னிலையில் கடன் வாங்கினார் என்றும், எப்போது காசோலையை கொடுத்தார் என்று எ.சா.1 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் காசோலையானது எதிரியின் கையொப்பம் இல்லாமல் கொடுக்கப்பட்டது என்று எ.சா.1 குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:23:03 +0530

10.11. மேலும் புகார்தாரரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, மேற்படி எதிரியின் கணவர் ஸ்ரீவில்லிபுத்தூரை சேர்ந்த சாம்சன் என்பவரிடம் பெற்ற கடனுக்கு ஆதரவாக காசோலை கொடுக்கப்பட்டுள்ளது என்று எ.சா.1 கூறிய விபரங்களை குறித்து புகார்தாரரிடம் எவ்வித கேள்விகளும் கேட்கவில்லை. மேற்படி விபரங்களை குறித்து எதிரி அவரது பதில் அறிவிப்பில் குறிப்பிடாமலும், புகார்தாரரிடம் எவ்வித கேள்விகளும் கேட்காமலும் அமைதி காத்துள்ளார் என்பது கண்டறியப்படுகிறது.

10.12. மேலும் எதிரிக்கு தெரியாமல் அவரது காசோலையை சாம்சனிடம் கொடுத்ததாக எ.சா.1 குறிப்பிட்டு எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பதால் எதிரிக்கு தெரிந்துதான் காசோலையானது வேறு நபருக்கு சென்றுள்ளது என்பது தெரியவருகிறது. எ.சா.1 காசோலையை சாம்சனிடம் கொடுத்திருக்கும்பட்சத்தில், புகார்தாரரிடமிருந்து வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பிறகு சாம்சன் அல்லது புகார்தாரர் மீது எதிரி சட்ட நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எவ்வித நடவடிக்கையும் எதிரி தரப்பில் எடுக்கவில்லை. மேலும் காசோலையானது சாம்சனிடம்தான் கொடுக்கப்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் சாம்சன் என்பவரை சாட்சியாக விசாரிக்க எதிரி தரப்பில் எவ்வித முயற்சிகளும் எடுக்கவில்லை. மேலும் எதிரியின் கணவர் சாம்சனிடம் கடன் வாங்கினார் என்பதை நிரூபிக்கும் வகையில் எவ்வித ஆவணங்களும் எதிரி தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

10.13. மேலும் காசோலையில் உள்ள விபரங்களை எதிரிதான் பூர்த்தி செய்து கொடுத்தார் என்று புகார்தாரர் அவரது குறுக்கு விசாரணையில் கூறும்பட்சத்தில், அதனை மறுக்கும் வகையில் எதிரி தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரியை போன் மூலம் தொடர்பு கொண்டேன் என்று புகார்தாரர் அவரது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்திருக்கும் நிலையில், அதனை எதிரி தரப்பில் குறிப்பிட்டு மறுக்கவில்லை. மேலும்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:23:10 +0530

எதிரியிடம் புகார்தாரர் போன் மூலம் பேசவில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரியின் போன் பரிவர்த்தனைகளை அவரது தரப்பில் தாக்கல் செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகையால் எதிரிக்கு புகார்தாரரை தெரியாது என்ற எதிரியின் தரப்பின் வாதமானது ஏற்புடையதாக இல்லை என்று முடிவு செய்கிறது.

10.14. புகார்தாரரின் நிறுவனமானது பங்குதாரர் நிறுவனம் என்பதை நிரூபிக்கும் வகையில் ம.சா.ஆ.6 ஆன ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகார்தாரரின் நிறுவனத்தை புதுப்பித்ததற்கான ஆவணத்தை ம.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகார்தாரரரின் நிறுவனம் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்வதற்கு நிறுவனத்தின் பங்குதாரர்கள் வழங்கிய அதிகாரம் மற்றும் ஒப்புதல் சான்று ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10.15. புகார்தாரர் எதிரிக்கு ரூ.3 லட்சம் கடன் கொடுத்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் புகார்தாரர் நிறுவனத்தின் 13.09.2025 ம் தேதியிட்ட கணிணி பணகணக்கை ம.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், எதிரி புகார்தாரரின் நிறுவனத்தில் 13.09.2025 ம் தேதியன்று கடன் வாங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. அந்த ஆவணத்தை எதிரி தரப்பில் மறுத்தாலும், எதிரியின் கணவர் ஸ்ரீவில்லிபுத்தூரை சேர்ந்த சாம்சனிடம் கடன் பெற்று காசோலை கொடுத்தார் என்பதை நிரூபிப்பதற்கு எதிரி தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாத நிலையில், ம.சா.ஆ.9 ஆன ஆவணத்தை தவிர்க்க இயலாது என்று முடிவு செய்கிறது.

10.16. புகார்தாரரின் நிறுவனத்தின் உரிமம் நகலை ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், புகார்தாரரின் பெயரில் உரிமம் பெறப்பட்டு கஜானா பைனான்ஸ் என்ற பெயரில் கடன் கொடுக்கும் தொழில் செய்து கொள்ளலாம் என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் எதிரி தரப்பு வாதத்தில், சட்டப்படி புகார்தாரர் நிறுவனத்தின்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:23:17 +0530

பெயரில்தான் உரிமம் பெற வேண்டும் என்றும், ஆனால் புகார்தாரரின் பெயரில் உரிமம் பெற்றுள்ளதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது. மேற்படி புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்த ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.9 ஆன ஆவணங்கள் மூலம் எதிரி புகார்தாரரின் நிறுவனத்தில் கடன் வாங்கியுள்ளார் என்று தெரிகின்ற நிலையில், புகார்தாரர் அவரது நிறுவனத்தின் பெயரில் உரிமம் பெறவில்லை என்ற காரணத்தினால் மட்டுமே எதிரி பெற்ற சட்டப்படியான கடனை திருப்பி கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்று தீர்மானிக்க இயலாது என்று முடிவு செய்கிறது.

10.17. புகார்தாரர் அவரது மனுவில், 13.09.2025 ம் தேதியன்று எதிரி புகார்தாரர் நிதிநிறுவனத்திற்கு சென்று பணம் பெற்றதாக கூறியுள்ளார். ஆனால் புகார்தாரர் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியன்று எதிரி புகார்தாரரின் நிறுவனத்தில் வைத்து புகார்தாரரை சந்திக்கவில்லை என்றும், காசோலையை கொடுக்கவில்லை என்றும், வேறு இடத்தில் இருந்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரி எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை.

10.18. இவ்வழக்கில், புகார்தாரரை எதிரிக்கு தெரியாது என்றும், அவரிடம் எதிரி கடன் வாங்கவில்லை என்றும், காசோலை கொடுக்கவில்லை என்று எதிரி தரப்பில் நிரூபிக்காத காரணத்தினாலும், காசோலையில் உள்ள கையொப்பமானது எதிரியின் கையொப்பம் இல்லை என்று நிரூபிக்காத காரணத்தினாலும், சாம்சன் என்பவரை எதிரி தரப்பில் விசாரிக்காத காரணத்தினாலும், சாம்சன் என்பவருக்கும், புகார்தாரருக்கும் இடையே பழக்கம் உள்ளது என்பதை எதிரி தரப்பில் நிரூபிக்காத காரணத்தினாலும், புகார்தாரர் அறிவிப்பு அனுப்பிய பின்னர் சாம்சன் அல்லது புகார்தாரர் மீது எதிரி சட்டரீதியான நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலும் எதிரியின் எதிர்வாதத்தை அவரது தரப்பில் நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்கிறது. எனவே புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 118(a) மற்றும் பிரிவு 139 கீழான சட்டப்படி அனுமானங்களை எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:23:23 +0530

சான்றாவணங்கள் மூலம் மறுக்கப்படவில்லை என்று முடிவு செய்கிறது. எனவே எதிரி புகார்தாரரிடம் வாங்கிய சட்டப்படியான கடனுக்கு ஆதரவாக தாவா காசோலையை புகார்தாரரிடம் கொடுத்துள்ளார் என்றும், காசோலை தொகையை எதிரி கொடுக்க கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10.19. மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் எதிரி மீது மாற்றுமுறை ஆவணசட்டம் பிரிவு 138–ன் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. <u>முடிவு:</u>

எதிரி ஆஜர். முடிவாக, எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12.<u>தண்டனை:</u>

முடிவாக, எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என்று முடிவு செய்து, எதிரிக்கு மாற்று முறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழான குற்றத்திற்கு 3 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று பிரிவு 278(2)–ன் B.N.S.S கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் சொத்து எதுவும் தாக்கல் இல்லை.

13. <u>குவிமுச பிரிவு 357–ன் கீழ் இழப்பீடு:</u>

தாவா காசோலை தொகையை எதிரி புகார்தாரருக்கு 2 மாத காலத்திற்குள் பிரிவு 395(3) B.N.S.S–ன் கீழ் இழப்பீடாக செலுத்த வேண்டும், தொகை செலுத்த தவறினால் மேலும் கூடுதலாக எதிரி 1 மாதம் காலம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:23:30 +0530

சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் ஆகஸ்டு மாதம் 27-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:23:36 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.

1. புகார்தாரர் தரப்பு சாட்சி:

1	ம.சா.1	திரு.சரவணன் (புகார்தாரர்)

2. புகார்தாரர் தரப்பு சான்றவணங்கள்:

1	ம.சா.ஆ.1	13.10.2025 நாளிட்ட 098460 என்ற எண் கொண்ட பாங்க் ஆப் இந்தியா வங்கி, சிவகாசி கிளைக்குரிய ரூ.3,00,000/-க்கான காசோலை அசல்
2	ம.சா.ஆ.2	01.11.2025 நாளிட்டு Funds Insufficient என்ற காரணத்தினால் திருப்பப்பட்ட வங்கி குறிப்புரை அசல்
3	ம.சா.ஆ.3	07.11.2025 நாளிட்ட புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக இரசீது அலுவலக நகல் மற்றும் அசல்
4	ம.சா.ஆ.4	08.11.2025 அன்று அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல்
5	ம.சா.ஆ.5	18.11.2025 நாளிட்டு எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு
6	ம.சா.ஆ.6	புகார்தாரர் நிறுவனம் பதிவு செய்யப்பட்டதற்கான Form C நகல்
7	ம.சா.ஆ.7	புகார்தாரர் நிறுவனத்தின் புதுப்பித்தலுக்கான கட்டண இரசீது நகல்
8	ம.சா.ஆ.8	புகார்தாரர் நிறுவனத்தின் உரிமத்தின் நகல்
9	ம.சா.ஆ.9	புகார்தாரர் நிறுவனத்தின் 13.09.2025க்கான பரிவர்த்தனை பதிவேடு நகல்
10	ம.சா.ஆ.10	புகார்தாரர் நிறுவனத்தின் பங்குதாரர்கள் வழக்கு தாக்கல் செய்வதற்காக புகார்தாரருக்கு அளித்த அதிகாரம் மற்றும் ஒப்புதல் சான்று நகல்

3. <u>புகார்தாரர் தரப்பு சான்றுபொருள்</u>: இல்லை

4. <u>எதிரி தரப்பு சாட்சி:</u>

1	எ.சா.1	திரு.காளிச்சாமி

<u>5. எதிரி தரப்பு சான்றாவணம், சான்றுபொருள்: இல்லை</u>

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.27 14:23:43 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.